மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, இப்போதுதான் இதுபற்றிய கருத்துரு மாவட்ட சமூக நலத் துறை அலுவலரிடமிருந்து சமூக நலத் துறை இயக்குநருக்கு வந்திருக்கிறது. அதன் அடிப்படையில் சமூக நலத் துறை இயக்குநர் பரிசீலித்து, பிறகு அதை அரசுக்கு அனுப்புகிறபோது, அதை நல்ல முறையில் ஆய்ந்து ஒரு முடிவெடுக்கப்படும்.

திரு. எல். ஜெயச்சந்திரன்: தலைவர் அவர்களே, சமூக நலத் துறையால் கடலூரில் கண்பார்வையிழந்தோர் பள்ளி அமைக்கப்பட்டிருக்கிறது. சிதம்பரத்தில் காது கேளாதோர், பேச முடியாதோர் பள்ளி இருக்கிறது. இந்த இரண்டையும் ஒரே இடத்தில், கடலூரில் அமைப்பதற்காகத்தான் இந்தக் கேள்வியையே கேட்டேன். ஆகவே இதைச் சேர்க்க வெகு விரைவில் முடிவெடுத்து, வரும் நிதியாண்டிலேயே அதைக் கடலூருக்குக் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, மிக விரைவாக அதை ஆய்ந்து முடிவெடுப்பதற்கான வழிவகைகளை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் துவக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. உரிமைப் பிரச்சினை.

அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதிகளை 'தினகரன்' நாளேடு வெளியிட்டது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலவை விதி 162-ன் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள், 'தினகரன்' பத்திரிகை மீது உரிமைப் பிரச்சினை கொண்டுவர வேண்டுமென்று முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார். அது எவ்வாறு மேலவை விதியின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்க வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நம்முடைய விதி 162-ன்படி, இந்த மன்றத்தில் நடக்கிற எந்தப் பிரச்சினையையும் திரித்தோ, மாற்றியோ வெளியிடக்கூடாது என்ற அடிப்படையில், இங்கே நடைபெறுகிற விவாதங்கள் சரியான முறையில் வெளியிடப்பட

வேண்டும் என்பதும், அதனால் யாருக்கும் பாதிப்பு ஏற்படக் கூடாது என்பதும், விதிகளில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. சென்னையிலிருந்து வெளிவருகிற 'தினகரன்' பத்திரிகை ஒளி. 9, கிற்று 335 இதழில் இந்த மன்றத்தில் நடைபெற்ற ஒரு விவாதத்தைப்பற்றிச் செய்தி வெளியிடுகிற நேரத்தில், மிகப் பெரிய அளவுக்கு பெரிய தலைப்பில் ''மந்திரி ராமச்சந்திரன் 10 லட்சம் மோசடி.'' என்று முதல் பக்கச் செய்தியாக வெளியிட்டதோடு அந்தப் பத்திரிகை விற்பனையாகும் கடைகளின் முன் வால்போஸ்டர்களிலும், இந்தச் செய்தி போடப்பட்டு, எங்கும் ஊழல், எதிலும் ஊழல் என்று தலைப்பிட்டு 6-வது பக்கத்தில் இந்த அவையில் நடைபெறாத, பேசப்படாத சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிறது.

(முற்பகல் 10-40)

அந்த ''எங்கும் ஊழல்'' என்ற தலைப்பில் இதைப்போல ஏராளமான ஊழல்கள் எங்கும் இலஞ்சம், எதிலும் இலஞ்சம், எங்கும் ஊழல், எதிலும் ஊழல், அவை எல்லாம் வீதிகளில் திரை அரங்குகளாகவும், எண்ணெய் ஆலைகளாகவும் உரு மாறி இருக்கின்றன என்று அந்தப் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தப் பத்திரிகையினுடைய அடுத்த நாள் 27-ம் தேதி செய்தியில் ஒரு கருத்துப்படம்—கேலிப்படம் அல்ல, கருத்துப்படம்—என்ற தலைப்பில் மாண்புமிகு அமைச்சர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் படத்தைப் போட்டு, அவருடைய மீசையைப் பிடித்து இழுப்பது மாதிரி போட்டு . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மீசையையா?

திரு. எஸ். ஆர். இராதா: பத்து இலட்சம் எங்கே என்று கேட்கிற அளவுக்கு ஒரு செய்தி வெளியிடப்பட்டு அந்தப் பத்திரிகையினுடைய ஆசிரியர் திட்டமிட்டு, மாண்புமிகு அமைச்சரைப் பழிவாங்க வேண்டுமென்கிற நோக்கத்தோடு, அந்தப் பத்திரிகையினுடைய பிரதிகளையும் விருதுநகரில் மட்டும் 5,000 பிரதிகள் விலைக்கு விற்காமல், வீதிகளிலே கொண்டுபோய் வழங்கி அவமானப்படுத்துகிற முறையில் திட்டமிட்டு இந்தச் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனை நம் அவையின் உரிமை மீறல் பிரச்சினை என்ற அளவில் அவைக்குத் தெரிவிக்கிறேன். இதைப்போன்றே சில பத்திரிகை ஆசிரியர்கள், மிரட்ட வேண்டுமென்ற அளவுக்கு . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அத்தோடு நிறுத்தினால் போதும். உரிமைப் பிரச்சினையை எடுத்துச் சொல்கிறார்கள். அதை மட்டும் சொன்

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த உரிமை மீறல் பிரச்சினையில் இப்படி அமைச்சரைப் பழி வாங்க வேண்டுமென்கிற நோக்கத்தோடு, திட்டமிட்டு செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இது அவையினுடைய உரிமையை மீறுவதாகக் கருதப்படுகிறது. இது குறித்து விதி 162-ல் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விதி 67-ல் உறுப்பினர் எவரைப்பற்றியும் மானக்கேடான, அவைக்கு ஒவ்வாத வார்த்தைகளைப் பயன்படுத்தக்கூடாதென்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே 67 ஆம் விதியில் தனிப்பட்ட முறையிலும் தாக்கக்கூடாது என்றும் இருக்கிறது. இவ்வளவு விதிமுறைகளையும் மீறி ஒரு பத்திரிகை ஆசிரியர் மோசடி செய்து கொண்டிருக்கிறார். இது அவை உரிமையை மீறியதாகக் கருதி, இதை உரிமைக் குழுவுக்கு அனுப்பி, விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இதுகுறித்து 'தினகரன்' ஆசிரியரிடம் விளக்கம் கேட்டு, பின்னர் எனது தீர்ப்பை வழங்குகிறேன்.

3. க[illegible]

நெல்லை மாவட்டம், மேலப்பாவூர் கிராமத்தில் இரு பிரிவினர் மோதிக் கொண்டு வெடி குண்டுகள் வீசப்பட்டு 20 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

* **திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"நெல்லை மாவட்டத்தில் மேலப்பாவூர் கிராமத்தில் இரு தரப்பினர் மோதிக்கொண்டதில் வெடிகுண்டுகள் வீசப்பட்டு 20 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து".

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, விவரமான அறிக்கை@ அவையில் வைக்கப்பட்டுள்ளது.

@ 121-122 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.